**ஹங்குரன்கெத பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 மே 21 ஆந் திகதி விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 18 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹங்குரன்கெத பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டின் மீதி ரூபா 8,719,697 ஆக இருந்த போதும் ஐந்தொகையில் அது ரூபா 8,882,450 ஆக ரூபா 162,753 என கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிக்கவில்லை. |
| (ii) | 14 ஆம் இலக்க நாட்குறிப்பின் பிரகாரம் இரட்டிப்பு கணிப்பீட்டை திருத்துவதற்குரிய பதிவுகளை சீராக்காமையால் திரண்ட நிதியம் மற்றும் நிலுவை கழிவுப்பொருள் வரி ரூபா 121,850 வீதம் கூடுதலாகக் | சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிக்கவில்லை. |

காண்பிக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (iii) | முன்னைய ஆண்டின் கடன்கொடுதோருக்கு ரூபா 100,000 பணக்கொடுப்பனவின் போது தவறாக கணக்கீடு செய்யப்பட்டமையால் நிர்மாணக் கடன்கொடுத்தோர் ரூபா 200,000 குறைத்தும் செலவினம் ரூபா 200,000 கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிக்கவில்லை. |
| (iv) | 2018 ஆம் ஆண்டின் போது கூடுதலாக பட்டியலிடப்பட்ட ரூபா 97,956 ஐ திருத்துவதற்காக நாட்குறிப்பு எழுதப்பட்டிருந்த போதும் குறித்த இரட்டை பதிவுகள் கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிக்கவில்லை. |
| (v) | நிறைவேற்றப்படாத 43 செயற்திட்டங்கக்காக ரூபா. 2,150,000 ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிக்கவில்லை. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆவணங்களின் பிரகாரம் நிலுவை குப்பை வரி ருமானம் ரூபா 327,750 ஆக இருந்த போதும் கணக்கின் பிரகாரம் பெறுமதி ரூபா 442,450 ஆக இருந்தமையால் ரூபா 114,700 வித்தியாசம் காணப்பட்டது. | இணக்கமின்மை களை இணங்கண்டு சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) ஒரு வருடத்தை விஞ்சிய காலம் கடந்திருந்த நிர்மாணக் கடன்பட்டோர் | பெறவேண்டிய மீதிகளை அறவிடுதற்கு நடவடிக்கை எடுத்தல் | கருத்து தெரிவிக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மீதி ரூபா 100,000 ஆக இருந்தது. | வேண்டும். | |
| (ii) | ஒரு ஆண்டிற்கு மேற்பட்டுள்ள காலம் கடந்துள்ள செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,801,217 ஆக இருந்தது. | செலுத்தவேண்டிய மீதிகளை தீர்வு செய்யப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 12,260,318 பெறுமதியான 07 கணக்கு மீதிகளுக்கரிய அட்டவணைகள், வைப்பு பதிவேடு முற்றும் முற்பண பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதி செய்கின்ற சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ii) | ஒப்பந்தக்காரரின் வைப்புக் கணக்கில் ரூபா 304,690 ஆன வரவு மீதியொன்று காண்பிக்கப்பட்ட போதும் அதற்கான காரணங்க் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில் லை | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதி செய்கின்ற சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) 218 விதி | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று பேணப்படாமல் இருந்ததுடன் | உரிய விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | வீதிவரி அறவீட்டுக்காக ஆதனங்களின் மதிப்பீடு இறுதியாக 2013 ஆண்டில் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,124,364 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,517,554 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,009,900 | 3,362,314 | 1,461,841 | 1,900,473 | 2,653,600 | 2,867,853 | 1,170,580 | 2,281,153 |
| வாடகை | 5,344,300 | 4,064,347 | 2,002,306 | 2,062,041 | 5,232,000 | 3,514,595 | 2,865,909 | 2,496,322 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,785,000 | 1,982,480 | 1,982,840 | - | 2,638,000 | 2,222,141 | 2,222,141 | - |
| ஏனைய வருமானம் | 12,987,300 | 3,812,871 | 3,143,074 | 669,797 | 14,336,800 | 12,574,779 | 5,778,730 | 7,155,791 |
| மொத்தம் | 24,126,500 | 13,222,012 | 8,590,061 | 4,632,311 | 24,860,400 | 21,179,368 | 12,037,360 | 11,933,266 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹங்குரன்கெத பொது சந்தைக் கட்டடத் தொகுதியில் 12 கடைகளிலிருந்து 4 வருடங்கள் முதல் 9 வருடங்கள் வரை காணப்படுகின்ற ரூபா. 2,214,537 நிலுவை கடை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | உடன்படிக்கைக்கு அமைவாக நிலுவை வருமானத்தைஅறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா. 286,587 ஆன நீதிமன்றத் தண்டப்பணம் 1,119,993 மற்றும் காண பரிமாற்றல் முத்திரைக் கட்டணம் ரூபா. 4,780,200 அறவிடப்பட வேண்டியிருந்தது. | குறித்த தொகைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல். | கருத்து தெரிவிக்கவில்லை. |

### 2.2.4 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் பொறுப்புடைய நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டில் சுமத்தப்பட்ட மிகை கட்டணங்களில் 2019 திசெம்பர் 31 இல உள்ளவாறு ரூபா 57,512 அறவிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை | கருத்து தெரிவிக்கவில்லை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) பெறுகை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 2,634,297 தொகையான பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பெறுகை திட்டம் தயாரிக்கப்படவில்லை. | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபோன அபிவிருத்தி இலக்குகள் தொடர்பிலான நிகழ்ச்சி நிரல் பற்றி சபையானது சரியான விதத்தில் அறிவுறுத்தப்பட்டு இன்மையால்<br><br>மீளாய்வாண்டில் அது தொடர்பாக திட்டவட்டமான செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிலைபோன அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு<br><br>அதன் பிரகாரம் திட்டங்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 10 பதவிகளில் 16 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 193 இன் பிரகாரம் பாதிடப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் என்பனவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு தொடர்பான விடயங்களை விளக்குவதற்கான கூற்றொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | நிதி மற்றும் நிர்வாக விதிகளின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்இ | கருத்து தெரிவிக்கவில்லை |